DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C ACT CASES, THANJAVUR

C.C.No. - 12/2022

Prosecution PW - 6

| | | |
|---|---|---|
| Name | திரு. அஜித் | Occupation |
| Husband/Father Name | | Village |
| Taluk | | Age |
| Date | 13.03.2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873

Accused A1 absent. 355 BNSS petition filed and allowed. A2 to A5 Present.

முதல் விசாரணை

நான் நீலகிரிமாவட்டம் குந்தா தாலுக்கா எடக்காடு கிராமத்தில்குடியிருந்து Maxcab ஓட்டுனராக பணிபுரிந்து வருகிறேன். எனக்கு சொந்தமான TN 34 H 5492 என்ற சுவராஜ் மஸ்தான் மேக்சிகேப் வாகனத்தை 2 வது எதிரி சரவணன் என்பவருக்கு ரூ, 7,35,000 ற்கு விலை பேசி முதல் தவனையாக ரூ. 80000 த்தை பெற்றுக்கொண்டு 25.11.2019 ம் தேதி வாகனத்தை 2 வது எதிரிக்கு விற்றுவிட்டேன். வாகனத்தையும் 25.11.2019 அன்றே 2 வது எதிரியிடம் ஒப்படைத்தேன். 2 வதுதவணையான ரூ. 50,000 த்தை ஒருவாரத்திற்குள்ளும் மீதமுள்ள ரூ. 6,05000 த்தை 15 நாட்களுக்குள் பைனான்ஸ் போட்டு கொடுத்துவிட்டு பெயர் மாற்றம் செய்துகொள்வதாக ஒப்பந்தம்போட்டோம். பெயர் மாற்றம்செய்தவற்கு முன்பே 01.12.2019 ம் தேதி என் பெயரில் உள்ள வாகனத்தை கஞ்சா கடத்தியதாக தொலைகாட்சி மூலம் தெரிந்துகொண்டேன். இது குறித்து அருகில் உள்ள மஞ்சூர் காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தேன். பிறகு நாகப்பட்டிணம்போதைபொருள் நுண்ணிறிவு பிரிவு போலிசார் என்னை விசாரித்தார்கள். நடந்ததை கூறினேன்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

என் பெயரில் இருந்த வாகனத்தின் பதிவு சான்றை போலிசார் வசம் காண்பித்தேன். நான் வாகனத்தை 2 ம் எதிரிக்கு விற்றபோது ஏற்படுத்திகொண்ட ஒப்பந்ததை போலிசார் வசம் ஒப்படைத்தேன். TN 34 H 5492 என்ற சுவராஜ் மஸ்தான் மேக்சிகேப் வாகனம் எனக்கு சொந்தமானது என்பதற்கோ அதனை 2 வது எதிரி சரவணன் என்வருக்கு விற்றேன் என்பதற்கோ எந்தவித ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யாமல் போலிசார் கேட்டுகொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஓம்/ஜி.சுந்தரராஜன்
அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்